**Starting time 12.49 P.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 221/2015**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 20.10.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேந்திரன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :** இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை வரவில்லை என்றால், சரியல்ல. நான் குடியிருப்பது நரிப்பாடி என்றால், நினங்கரை. நினங்கரைக்கும் தாவா சொத்து இருக்கும் இடத்திற்கும் 5 கி.மீ. இருக்கும் என்றால், சுமார் 9 கி.மீ. இருக்கும். தாவா சொத்திற்கு அருகில் எனக்கு சொத்து எதுவுமில்லை என்றால், சரிதான். தாவா முதல் இன சொத்தில் எத்தனை அயிட்டங்களாக காட்டி வாதி வழக்கு போட்டுள்ளார் என்றால், 2 அயிட்டங்கள், ஒன்று வீடு, ஒன்று பாதை. பாதையின் புல எண், நீள, அகலம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. வீட்டின் நான்கு புற எல்லைகள் தெரியுமா என்றால், தாவா 1-ம் இன சொத்திற்கு வடக்கில் ராமலிங்க உடையார், கிழக்கில் ஜெகநாத ரெட்டியார், தெற்கில் பாதை, மேற்கில் மாணிக்க உடையார் மகன் கோபால் நிலம் உள்ளது.

2. தென்புறத்தில் பாதையை ஒட்டி வீடு எதுவுமில்லையா என்றால், பாதையை ஒட்டி கிழக்கில் குப்புசாமி ரெட்டியார், பொன்னம்மாள், அப்பாவு ஆகியோரின் வீடுகள் உள்ளது.

மேற்படி மூவரின் வீடும் தாவா முதல் இன சொத்தான வீட்டிற்கும் தென்புறத்தில்தான் உள்ளதா என்றால், இல்லை, பாதைக்கு கிழமேலாகத்தான் வீடுகள் உள்ளது. தாவா முதல் இன சொத்திற்கு தென்புறத்தில் கிழமேலாக சந்துள்ளது என்றால், தாவா முதல் இன சொத்தில் உள்ள வீட்டிற்கு பாதியில் கிழமேல் சந்தும், மேற்கில் தம்மம்பட்டி செல்லும் பாதையும் உள்ளது. தாவா முதல் இன சொத்திற்கு தென்புறத்தில் கிழமேல் சந்திற்கு தென்புறம் தாவா 2 வது இன சொத்து, பாதையும் உள்ளது, பாதை மேற்குபுறத்திலும், அதற்கு கிழக்கு பக்கத்தில் குப்புசாமி ரெட்டியார், பொன்னம்மாள், அப்பாவு ஆகியோரின் வீடுகள் உள்ளது என்றால், சரிதான்.

3. குப்புசாமி ரெட்டியார், பொன்னம்மாள், அப்பாவு, ராஜேந்தின் ஆகியோரின் தாவா 2 வது இன சொத்தின் வழியாகத்தான் செல்ல முடியும் என்றால், இல்லை. தம்மம்பட்டி மெயின் ரோட்டில் அப்பாவும், அப்பாவு வீட்டிற்கு கிழக்கில் தம்மம்பட்டி மெயின் ரோட்டில் இருந்து செல்லும் ராஜவீதியில்தான் குப்புசாமியும், பொன்னம்மாளும் செல்கிறார்கள். நான் கூறும் சங்கதிகள் தவறானவை என்றால், சரியல்ல. குப்புசாமி ரெட்டியார் மற்றும் பொன்னம்மாள் ஆகியேரின் வீடுகளுக்கு மேற்குபுறத்தில் வாசற்படி உள்ளது என்றால், இல்லை. மேற்குபுறத்தில் வாசற்படி உள்ளது என்றாலும், ஆணையர் தனது அறிக்கையில் அதுபற்றி குறிப்பிட்டுள்ளார் என்றால், சரியல்ல. 1-ம் இன சொத்திற்கு தென்புறத்தில் உள்ள சந்தானது ராஜவீதியில் சென்று சேர்க்கிறது என்றால், சரியல்ல. வாதி ராஜவீதியின் வழியாக சென்று தாவா சொத்தின் தென்புறத்திலுள்ள கிழமேல் சந்தின் வழியாக சென்று தாவா முதல் இன சொத்தை அடையலாம் என்றால், வாதியும், கிழக்கில் இருக்கும் ஜெகநாத ரெட்டியாரும் சேர்ந்துதான் அந்த சந்தை போட்டார்கள் அவர்கள் இருவருக்கும் அந்த சந்தில் செல்ல உரிமையுண்டு.

4. அந்த சந்தின் வழியாக தாவா முதல் இன சொத்திற்கு செல்லலாம் என்றால், ஆமாம். தம்மம்பட்டி மெயின் ரோட்டிற்கு வடக்கிலும் தாவா 2 வது இன சந்திற்கு மேற்கு புறத்திலும் 1-ம் பிரதிவாதி ராஜேந்திரனுக்கு நிலம் உள்ளது என்றால், இல்லை. தாவா

2 வது இன சொத்து வருவாய்த்துறை ஆவணங்களில் என்னவாக காட்டப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 2 வது சொத்தான சந்து வழியாகத்தான் 1 மற்றும் 3 பிரதிவாதிகளும், கோபால் என்பவரும் அவர்களது வீட்டிற்கு சென்று வருகிறார்கள் என்றால், இல்லை, ராஜேந்திரனும், கோபாலும் பங்காளிகள், ராஜேந்திரன் நிலத்திற்கு மேற்கில் 5 அடி தடம் போட்டு அதன் வழியாகத்தான் கோபால் செல்கிறார். நான் வழக்கிற்கு சம்பந்தமில்லாத சங்கதிகளைக் கூறுகிறேன் என்றால், சரியல்ல. தாவா 2 வது இன சொத்தில் பிரதிவாதிகளுக்கு உரிமை இருப்பதால் அதை பொறுத்து வாதி தனக்கு மட்டுமே உரிமை இருப்பதாக பரிகாரம் கோர முடியாது என்றால், சரியல்ல. உள்ளூரில் இருக்கும் யாரும் பொய் சாட்சியம் அளிக்க முன்வராததால் வெளியூரில் இருந்து என்னை அழைத்து வந்து, நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 01.08 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.